Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 8 Pages 


# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 Click - 09
DECEMBER 2023 Re. 1


அனைவருக்கும் இனிய புத்தாண்டு
மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

- CVPA







## 2024 ஆம் ஆண்டிற்கான CVPA டைரி, காலண்டர், பாக்கெட் டைரி ஆகிய மூன்றும் சங்க உறுப்பினர்களின் இடத்திற்கு நேராகச் சென்று வழங்கப்படுகிறது

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்!

நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் 2024 ஆம் ஆண்டுக்கான பெரிய டைரி, காலண்டர், மினி டைரி, ஆகிய மூன்றும் டிசம்பர் 20ஆம் தேதி முதல் நமது சங்கத்தின் துணைத் தலைவர்கள், இணைச்செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள உறுப்பினர்களை நேராக சந்தித்து டைரி காலண்டரை வழங்கி வருகின்றனர். டிசம்பர் 31ஆம் தேதிக்குள் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு டைரி வழங்கப்பட்டு விடும் என்று நம்புகிறோம். பகுதி செயலாளர் இல்லாத இடங்களில் மாற்று ஏற்பாடு செய்து வழங்கப்படும். அங்கொன்றும் இங்கொன்றுமாக ˙விடுபட்டு போகிறவர்களுக்கு, அந்தந்த பகுதியில் துணைத்தலைவர் இணைச் செயலாளர் பகுதி செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். டைரியைப் பெற்றுக் கொண்ட நமது சங்க உறுப்பினர்கள் அனைவருமே, சங்க நிர்வாகிகளுக்கு நன்றியை தெரிவித்து வருகின்றனர்.2024 ஆம் ஆண்டு டைரியை தயாரிக்க விளம்பரங்கள் கொடுத்து உதவிய எல்லா விளம்பரதாரர்களுக்கும் நமது நிர்வாகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக நமது சங்க உறுப்பினர்கள் வழங்கிய ஆயிரம் ரூபாய்க்கான விளம்பரங்கள், 2024 ஆம் ஆண்டு டைரியை தயாரிக்க பொருளாதார ரீதியாக பெரும் அளவில் உதவியாக இருந்தது. இவர்கள் அனைவருக்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்னதாக, நமது சங்கத்தின் செயற்குழு கூட்டம் இம்மாதம் எஸ். வி.எஸ் கிளப்பில் நடைபெற்றது.இக் கூட்டத்தில் மாநில சங்கத்தின் அமைப்பாளர் திரு. சரவணன் அவர்களும் ,மாநில சங்கத்தின் மண்டலம்1ன், மண்டல செயலாளர் திரு. கவுஸ் பாட்ஷா அவர்களும், கலந்து கொண்டார்கள்.இக் கூட் டத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான டைரி காலண்டர் ,பாக்கெட் டைரி ஆகிய மூன்றும் வெளியிடப்பட்டன. இந்த கூட்டத்திற்கு நமது சங்க தலைவர் செல். செல்வம் அவர்கள் தலைமை தாங்கினார். சங்க செயலாளராகிய நான் முன்னிலை வகித்தேன்.

நமது சங்கத்தின் செயற்குழு கூட்டத்தில் தமிழ்நாடு வீடியோ மற்றும் போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் தேர்தலில் மாநிலசங்க அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. சரவணன் அவர்களுக்கும், மண்டலம் 1ன் சார்பாக மண்டல செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.கௌஸ் பாஷா அவர்களுக்கும், நமது சங்கத்தின் சார்பாக பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தில் தங்கள் உடைமைகளை தண்ணீரில் மூழ்க விட்ட ஒளிப்படகலைஞர்களுக்கு உதவிடும் நோக்கத்தில் சோனி, கேனான், சிக்மா, மகா கம்ப்யூட்டர், எப்சன் நிறுவனத்தின் ஆர்தரைஸ்டு சர்வீஸ் சென்டரான லட்சுமி சிஸ்டம், எம்.ஏ கேமரா சர்வீஸ் சென்டர் போன்ற நிறுவனங்கள் நமது சங்க உறுப்பினர்களுக்காக இலவசமாக கேமரா சர்வீஸ் செய்து கொள்ள அனைவருக்கும் அழைப்பு விடுத்தது. இதற்காக நமது சங்கம் சார்பாக அந்த நிறுவனங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களைத் தவிர நமது சங்க உறுப்பினர்களுக்கு ஆல்பத்தில் 24 சதவீதம் தள்ளுபடி வழங்கி அறிவிப்பு வெளியிட்ட தீனா கலர்லேப் நிறுவனத்திற்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக வட சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் பாலாஜி அவர்கள், மழை வெள்ளத்தில் கேமரா மூழ்கியதால் தனது வாழ்வாதாரம் எங்கே பறிபோய் விடுமோ என்று கவலைப்பட்டார். நமது சங்கத்தின் நிர்வாகிகளை சந்தித்து உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார். நமது சங்க நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்று இவருடைய கேமராவை எம்.ஏ கேமரா சர்வீஸ் சென்டர் விரைவாக சர்வீஸ் செய்து கொடுத்தது. சங்க உறுப்பினர் பாலாஜி அவர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நமது சங்க உறுப்பினர் காசிநாதன் அவர்கள் சபரிமலைக்கு சென்று திரும்பியபோது மதுரை அருகே வாடிப்பட்டி என்னும் இடத்தில் இவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளானது. இது குறித்த விவரம் நமது சங்கத்தின் சார்பாக மாநில சங்கத்திற்கு சென்றுள்ள மண்டலம் 1ன் செயலாளர் கவுஸ் பாட்ஷா அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மாநிலத் தலைவர் சிவகுமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி மதுரை மாவட்ட சங்கத்தை சேர்ந்த குகன் அவர்களும், மாநில சங்க நிர்வாகி மதுரை ஸ்ரீராம் கண்ணன் அவர்களும், விபத்து நடந்த இடத்திற்கு நேரில் சென்று விசாரித்து, அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை செய்து கொடுத்து சென்னைக்கு பத்திரமாக அனுப்பி வைத்தனர். இந்த பேருதவியை புரிந்த மதுரை மாவட்ட சங்க நிர்வாகிகளுக்கும், மாநில சங்க நிர்வாகிகளுக்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வேலூர் மாவட்ட சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு பொதுக்குழு மற்றும் மாநில சங்கத்தில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா ஆகியன இம்மாதம் வேலூரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் சார்பில் தலைவர் செல் செல்வம் அவர்களும் , செயலாளர் பிரேம் குமார் அவர்களும், பொருளாளர் ஜெயபால் அவர்களும் கலந்து கொண்டனர்.

2024 ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் பிரகாசமான ஆண்டாக இருக்கட்டும்!

நீங்கள் நினைத்த எல்லா இலக்குகளையும் அடைய , மன வலிமையும், தைரியமும் கிட்ட இறைவன் அருள் புரியட்டும். அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
DM. **பிரேம்குமார்**
CVPA செயலாளர்

# வடசென்னையில் ஓர்க்ஷாப்





எடிட்டிங் ஓர்க்ஷாப்



அடோப் போட்டோஷாப் ஓர்க்ஷாப்





வடசென்னை பகுதி உறுப்பினர்களுக்காக நமது சங்கத்தின் சார்பில் ஸ்ரீ சாய் மஹாலில் போட்டோஷாப் மற்றும் வீடியோ எடிட்டிங் பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. வீடியோ எடிட்டிங் குறித்து ஆலயம் ஈஸ்வரன் அவர்களும், அடோப் போட்டோஷாப் குறித்து பொள்ளாச்சி கார்த்திக் அவர்களும் இந்த பயிற்சி வகுப்பை நடத்தினார்கள். இது வடசென்னை உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி வகுப்பு என்பதால் அந்த பகுதியில் உள்ள உறுப்பினர்கள் இந்த வகுப்பில் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. வடசென்னை துணைத் தலைவர் கவுஸ் பாட்ஷா அவர்களும், வட சென்னை இணைச் செயலாளர் பிரபா அவர்களும் இந்த வகுப்பிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள். நமது சங்கத் தலைவர் செல் செல்வம் அவர்களும் செயலாளர் பிரேம்குமார் அவர்களும் பொருளாளர் ஜெயபால் அவர்களும் பி.ஆர்.ஓ ரவிக்குமார் அவர்களும் இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்கள்.

இந்த ஒர்க் ஷாப் சிறப்பாக அமைய உடனிருந்து உதவி புரிந்த வடசென்னை பகுதி செயலாளர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக உதவி புரிந்த ஸ்பான்ஸர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



வேலூர் மாவட்ட சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு பொதுக்குழு மற்றும் மாநில சங்கத்தில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா இம்மாதம் வேலூரில் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக தலைவர் செல்.செல்வம் அவர்களும், செயலாளர் பிரேம்குமார் அவர்களும், பொருளாளர் ஜெயபால் அவர்களும் கலந்து கொண்டார்கள்.




மத்திய சென்னை அயன்புரம் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் தருண் வீடியோ அருள் அவர்களின் பேத்தி சாத்ராக் சாஷிக் தனது முதலாவது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடினார். இந்த பிறந்தநாள் விழாவில் நமது சங்க உறுப்பினர்களும், சங்க செயலாளர் பிரேம்குமார் அவர்களும், பகுதி செயலாளர் ரகுநாத் அவர்களும் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.



வடசென்னை வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த , நமது சங்க உறுப்பினர் கோபிநாத் அவர்களின் மகள் சம்ருத்தி தனது முதலாவது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடினார். இந்த பிறந்தநாள் விழாவில் நமது சங்க உறுப்பினர்களும், முன்னாள் பகுதி செயலாளர் மதன் அவர்களும் கலந்துகொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.




வடசென்னை, திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர், திரு.ராஜா அவர்களின் மகன் விக்னேஷ் ராஜா அவர்கள் எமகாந்தன் எனும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இத்திரைப்படம் வெற்றி பெற நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



தென் சென்னை 2 , கிழக்கு தாம்பரம் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் ஆர் ஆர் டிஜிட்டல் ஸ்டுடியோ ரமேஷ் அவர்களின் மகள் அபிநயா - விஸ்வநாத் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக தாம்பரம் பகுதி செயலாளர் பாபுஜி அவர்களுடன், முன்னாள் பகுதி செயலாளர் தாம்பரம் விஜயகுமார் ஆகியோர் மணமக்களை நேரில் சென்று வாழ்த்தினார்



அனைவருக்கும் வணக்கம்!

24.12.2023 அன்று காலை சுமார் 11 மணியளவில் சென்னை மாவட்டத்தை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.காசிநாதன் அவர்கள் தனது மூன்று நண்பர்களுடன் சபரிமலை சென்று திரும்பி வரும் வழியில், மதுரை அருகில் உள்ள வாடிப்பட்டி என்ற இடத்தில் கார் விபத்துக்குள்ளானது. இந்த தகவல் உடனடியாக எனக்கு கிடைத்தது. இதுகுறித்து நமது மாநில தலைவர் சிவகுமார் அவர்களை தொடர்பு கொண்டு நமது சங்க உறுப்பினருக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டேன். அவர் உடனடியாக மதுரை மாவட்ட சங்கத்தை சேர்ந்த திரு. குகன் அவர்களுக்கும், திரு.ஸ்ரீராம் கண்ணன் அவர்களுக்கும் விரைந்து சென்று அனைத்து உதவிகளையும் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் இருவரும் இரவு வரை அவர்களுடன் இருந்து, அனைத்து மருத்துவ உதவிகளும் உடன் இருந்து செய்து கொடுத்து அவர்களை சென்னைக்கும் அனுப்பி வைத்தனர். நமது சங்க உறுப்பினர்களுக்கு எல்லா உதவிகளும் செய்து கொடுத்த திரு. ஸ்ரீராம் கண்ணன் அவர்களுக்கு சென்னை மாவட்டத்தின் சார்பாகவும்,தமிழ்நாடு வீடியோ மற்றும் போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் சார்பாகவும் கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

**அ.கௌஸ் பாஷா**, மண்டலசெயலாளர்



அனைவருக்கும் வணக்கம்,

எனது பெயர் பாலாஜி நான் பழைய வண்ணாரப்பேட்டை பகுதியை சார்ந்த CVPA உறுப்பினர் கடந்த மாதம் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட எனது கேமரா (Nikon 7200) ஒன்று தண்ணீரில் நனைந்து பழுதாகிவிட்டது என்ன செய்வதறியாத திகைத்து நின்ற போது நமது சங்கத்தின் நிர்வாகிகளை அணுகி உதவிடுமாறு கேட்டுக் கொண்டேன் அதன் பேரில் MA Camera சர்வீஸ் சென்டர் உரிமையாளர் அவர்களிடத்தில் அணுகி அந்த கேமராவை முழுவதுமாக இலவசமாக பழுது பார்த்து எனக்கு கொடுத்துள்ளார்கள் இந்த தருணத்தில் M A சர்வீஸ் சென்டர் அவர்களுக்கும் நன்றி CVPA சங்கத்தின் நிர்வாகிகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்

# WIRELESS TRANSMITTER UTILITY

புலிவலம் ரவி (திருச்சி)-9442777240

நிக்கான் நிறுவனம் தனது அறிமுக கேமராக்களில் புதுப்புது தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் Wireless Transmitter Utility என்ற புதிய தொழில்நுட்ப வசதி தற்போது வருகிற நிக்கானின் அனைத்து மிர்ரர்லெஸ் கேமராக்களிலும் (சில DSLR கேமராக்கள்) இடம்பெற்றிருக்கிறது. இந்த அப்ளிகேசன் (வை-பை மூலமாக) கேமராவிலிருந்து தேர்வு செய்யப்பட்ட படங்களை நேரடியாக கம்ப்யூட்டர்-க்கு ஆண்ட்ராய்டு மற்றும் ஆப்பிள் அப்ளிகேசன் மூலம் அனுப்புகிறது.




நிக்கானின் முன்னதாக வந்த கேமராக்களில் இடம் பெற்ற Bluetooth, Near Field Communication, Wireless Mobile Utility, Snap Bridge போன்ற அப்ளிகேசன்கள்; மூலமாக எவ்வாறு செல்போன்களுக்கு (ஸ்மார்ட் டிவைஸ்) படங்களை பதிவிறக்கம் செய்வது மற்றும் கேமராவை இயக்குவது போன்ற செயல்களை செய்தோமோ, அதே போன்று கேமராவிலிருந்து கம்ப்யூட்டர் மற்றும் லேப் டாப் போன்றவைகளுக்கும் அதே போன்று செயல்பாடுகளை செய்யும் முறைதான் Wireless Transmitter Utility ஆகும்.

கேமராவில் Wi&Fi ஆன் செய்து அதன் வழியாக படங்களை கம்ப்யூட்டர்-க்கு அனுப்புவதற்கு முன்பு Wireless Transmitter Utility என்ற அப்ளிகேசனை நிக்கான் டவுன்லோட் சென்டர் என்ற வெப்சைட்-ல் இருந்து கம்ப்யூட்டர்-க்கு டவுன்லோடு செய்துகொள்ளவேண்டும். பதிவிறக்கம் செய்வதற்கு முன்பு கம்ப்யூட்டரில் அதற்கென தேவைப்படும் வசதிகளை (Notices and System Requirements) தெரிந்து கொள்ளவேண்டும். லேட்டஸ்ட்டாக வந்த சாப்ட்வேர்தானா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.


Wi&Fi மற்றும் Wireless Transmitter Utility இவைகள் இரண்டும் இணைந்தவுடன் மட்டுமே கேமராவை, கம்ப்யூட்ருடன் இணைக்க முடியும். பதிவிறக்கம் செய்ய க்ளிக் செய்யவும். ;. https://downloadcenter.nikonimglib.com

கேமராவிற்கும் கம்ப்யூட்டருக்கும் இடையே வயர்லெஸ் இணைப்புகளை நிறுவ இரண்டு முறைகளை பயன்படுத்தலாம்.

1.Direct Wireless Connection (Direct Connection to PC)

இந்த வகையில் கேமராவையும், கம்ப்யூட்டரையும் வயர்லெஸ் மூலம் இணைக்கலாம். இதில் கேமரா LAN Access point (LAN& Local Area Network) மூலம் வயர்லெஸ் ஆக செயல்படுகிறது.

அவுட்டோர் மற்றும் இதர சூழ்நிலைகளில் இதை பயன்படுத்தும்போது, கம்ப்யூட்டரில் இன்டர்நெட் கனெக்சன் இல்லாதவாறும் மற்றும் வேறு எந்த வயர்லெஸ் கனெக்சன் இல்லாதவாறும் பார்த்துக்கொள்ளவேண்டும். இன்டர்நெட் கனெக்சன் கம்ப்யூட்டரில் இணைக்கப்பட்டிருந்தால், கேமராவுடன் இந்த அப்ளிகேசனை இணைக்க முடியாது.




2.Infrastructure Mode (Search for Wi&Fi network)

இந்த வகையில் கேமராவையும், கம்ப்யூட்டரையும்ஏற்கனவேஇணைப்பிலுள்ள நெட்வொர்க் (ஹோம் நெட்வொர்க் உட்பட) வழியாக வயர்லெஸ் மூலம் இணைகிறது. இந்த வகையில் கம்ப்யூட்டர், கேமராவுடன் இணைப்பிலிருக்கும்போது, இன்டர்நெட் தொடர்பை ஏற்படுத்தலாம்.

இந்த வகையில் கம்ப்யூட்டர், கேமராவுடன் இணைப்பிலிருக்கும்போது, LAN Access point சப்போர்ட் செய்யாது. ஒரே மாதிரியான நெட்வொர்க் உள்ள கம்ப்யூட்டர்களுடன் மட்டும்தான் இணைக்க முடியும்.

மேலே நாம் கண்ட வசதிகளை மிர்ரர்லெஸ் கேமராக்களுக்கு மட்டும் கம்ப்யூட்டருடன் இணைப்பதோடு அல்லாமல், DSLR கேமராக்களுக்கும் இதுபோன்ற வசதிகளை நாம் பெற, WT&7, WT&6, WT&5, WT&4, WT&1, போன்ற கூடுதல் வயர்லெஸ் ட்ரான்ஸ்மிட்டர் கருவிகளை (Optional Accessories) தனியாக வாங்கி, ஒவ்வொரு மாடல் கேமராக்களுக்கு ஏற்றபடி, நிக்கான் நிறுவனம் குறிப்பிட்டபடி பொருத்திக்கொள்ளவேண்டும்.

உதாரணமாக நிக்கான் D850, D810, D810A, D750, D500 and D7200 கேமராக்களுக்கு WT&7 என்ற மாடல் வயர்லெஸ் ட்ரான்ஸ்மிட்டர் கருவியை பொருத்தவேண்டும். இதுபோன்று நிக்கானின் ஒவ்வொரு மாடல் கேமராக்களுக்கும் ஒவ்வொரு மாடல் வயர்லெஸ் ட்ரான்ஸ்மிட்டர் கருவிகளை பொருத்திக்கொள்ளவேண்டும்.

பெரும்பாலும் இதுபோன்ற வசதிகள் திருமண நிகழ்வின்போது கேமராவில் எடுத்த படங்களை உடனுக்குடன் இந்த ஸாப்ட்வேர் மூலம் கம்ப்யூட்டருக்கு பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் செய்து, மணவிழாவிற்கு வருகை தந்தவர்களுக்கு விரைவாக வழங்குவதற்கு எளிதாக இருக்கும். மேலும் ஸ்டுடியோவில் தொடர்ந்து படமெடுக்கும்போது உடனுக்குடன் படங்களை விரைவாக கம்ப்யூட்டருக்கு அனுப்ப ஏதுவாக இருக்கும்.

நிக்கான் மிர்ரர்லெஸ் கேமரா வைத்திருப்பவர்கள், இது போன்ற வசதிகளை பெற முயற்சி செய்து பாருங்கள். இந்த செய்முறை பயிற்சியை பெற ஒவ்வொரு மாடல் கேமரா வைத்திருப்பவர்களும், அதற்குரிய மேனுவல் புத்தகத்தை படித்து தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள். நன்றி நண்பர்களே....

அன்புடன் அட்மின், தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் க்ளப்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351
**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 31.12.2023

**To**